


# 42 மாடி அடுக்கக நிர்மாணிப்பு நிறுத்தப்பட்டது

## பள்ளி நிர்வாகம் மகிழ்ச்சி!



**நமது நிருபர்**

கோலாலம்பூர், டிச.28–

செராஸ் 2½ மைல் தமிழ்ப்பள்ளிக்கு அருகில் 42 மாடி அடுக்ககத்தை நிர்மாணிப்பதில் பள்ளி எவ்வளவு பிரச்சினைகளை எதிர்நோக்கியது என்பது அனைவரும் அறிந்த ஒன்று.


தற்போது இதில் ஒரு நல்ல செய்தி கிடைத்திருப்பதால் மாநகர் மன்றத் தலைவருக்குத் தாம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி மகேஸ்வரி வீரராஜா தெரிவித்தார்.

13ஆம் பக்கம்...

## 42 மாடி அடுக்கக நிர்மாணிப்பு நிறுத்தப்பட்டது








இங்கு மாநகர் மன்றத் தலைவர் நேரடியாக வந்து களமிறங்கியதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விவகாரம் தொடர்பில் வாட்சாப் குழு ஒன்றில் குரல் பதிவு ஒன்றை நான் செய்தேன். அவ்வப்போது எனக்குக் கிடைக்கும் தகவல்களை இக்குழுவில் பதிவேற்றம் செய்து விடுவேன்.

இதில் பெற்றோர்களும் தங்களின் வேலையை விட்டு இதில் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு இவ்வேளையில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இதில் நாம் தனி ஒருவராகக் களமிறங்கிச் செய்தால் முடியாது. எல்லோரும் ஒன்றாக இணைய வேண்டும் என்று அக்குழுவில் நான் வலியுறுத்திக் கொண்டிருப்பேன்.

அதை அடிப்படையாய்க் கொண்டு நேற்று பெற்றோர்கள் வந்திருந்தார்கள். அந்த இடத்தில் இதற்கு முன் வாழ்ந்தவர்கள், முன்னாள் மாணவர்கள், எனக்குப் பக்கபலமாக இருக்கும் என் செயலவை உறுப்பினர்கள், பள்ளி வாரியக் குழுத் தலைவர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். காரணம் இவையனைத்தையும் நாம் ஒற்றுமையாய் இருந்து செய்ததால்தான் இவ்வளவு தூரம் வரை போராடி அத்திட்டம் மாநகர் மன்றத் தலைவரால் சீல் வைத்து மூடப்பட்டது.

இது நிரந்தரமாக மூடப்பட்டதா என்ற விவரம் ஏதும் எங்களுக்குத் தெரியவில்லை. தற்போதைக்கு அதை மூடிவிட்டதால் நாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை, மாறாக இன்னும் எங்களால் முடிந்தவற்றை நாங்கள் செய்து கொண்டுதான் இருப்போம். கல்வி கற்கும் மாணவர்கள் நல்ல சூழ்நிலையில் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் பாடுபடுகின்றோம். எங்களுக்கு வேறு எதுவும் வேண்டாம். காரணம் அங்கு பாலர் பள்ளியிலிருந்து 6ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மிகவும் சிறு வயது சிறார்களாவர்.

பெரியவர்களாகிய எங்களுக்கே அந்த சத்தத்தைத் தாங்க முடியாத வேளையில், மாணவர்கள் எப்படித் தாங்குவார்கள்? ஆசிரியர்களுக்குப் பாடம் போதிக்க முடியவில்லை என்ற காரணத்திற்காகத்தான் நாங்கள் போராடுகின்றோம். இம்முயற்சி நல்லபடியாக நிறைவேற வேண்டும். இதில் மாநகர் மன்றத் தலைவர், மக்களாகிய நாம் தமிழ்ப்பள்ளிக்காக ஒன்று சேர்ந்து கை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் என்று மகேஸ்வரி குறிப்பிட்டார்.

இவ்விவகாரத்தில் செராஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டான் கொக் வாய் மற்றும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி மேற்கொண்ட முயற்சியில் இந்த நிர்மாணிப்புத் திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.